18–3–1983 (வெள்ளிக்கிழமை)	..	1. வேளாண்மை. 2. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.
19–3–1983 (சனிக்கிழமை).	..	1. பாசனம். 2. பாசனம் குறித்த மூலதனச் செலவு.
20–3–1983 (ஞாயிற்றுக் கிழமை).	..	விடுமுறை.
21–3–1983 (திங்கட்கிழமை). மற்றும் 22–3–1983 (செவ்வாய்க் கிழமை).	..	1. மருத்துவம். 2. பொதுச் சுகாதாரம்.

5–3–1983, சனிக்கிழமையன்று பேரவை காலை 11-00 மணிக்குக் கூடும். மற்ற நாட்களில் பேரவை வழக்கம்போல் காலை 9-00 மணிக்குக் கூடும்.

(ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 201(3)-ன் கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கீழ்க் கண்ட மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் 1983-ம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் தேதி பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவை செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்துள்ளார்கள்.

மானியக் கோரிக்கை எண்.	மானியக் கோரிக்கை விவரம்.
17	கல்வி
26	கைத்தறியும் நெசவுத் தொழிலும்.
28	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.
39	சாலைகளும் பாலங்களும்.
[illegible]	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

மானியக் கோரிக்கை எண்.	மானியக் கோரிக்கை விவரம்.
20	வேளாண்மை.
49	வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.
36	பாசனம்.
51	பாசனம் குறித்த மூலதனச் செலவு.
18	மருத்துவம்.
19	பொதுச் சுகாதாரம்.

ஏனைய மானிய கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்கள் 12—3—1983 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் கொடுக்கப் பெறவேண்டும்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான படிவங்களை மசோதாப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

1. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஏ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (ஆய்வுக்குழு திருத்தியமைத்தவாறு) 1980—தொடர்ச்சி.

பிரிவு—33 (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றைய தினம் இந்த சட்ட முன்வடிவின் பிரிவு 33 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்று விவாதிக்கப் பெற்றது.

இப்பிரிவிற்கு அமைச்சர் மொழிந்துள்ள திருத்தம் இப்போது பேரவையின் முடிவுக்கு விடப் பெறுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி:—

In clause 33,—

(i) for the marginal heading, substitute the heading " Constitution and meetings of the board";

(ii) in sub-clause (1), —

(a) *for* "(1)" *substitute* "(1)(a)";

(b) *for* the first proviso *substitute* the following namely:—

"Provided that in the board of every agricultural producers marketing society, credit society, consumer society, milk producers society and oil-seeds growers, society and such other class or category of registered societies as may be prescribed, there shall be one representative for the Scheduled Castes and Scheduled Tribes, one representative for the economically weaker sections and one representative for women; and if no member of the scheduled castes and Scheduled Tribes or the economically weaker sections or no woman is elected, then, the prescribed authority; may notwithstanding anything contained in sub-section (3), by order, direct that